# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2062/13 - 2018 මාර්තු මස 13 වැනි අඟහරුවාදා - 2018.03.13

*2062/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்க காணியொன்றைக் கையேற்றல்**

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச ஆகிய நான், நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் கீழே அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற அரசாங்க காணியை அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு இத்தால் பொறுப்பளிக்கின்றேன்.

சஜித் பிரேமதாச,
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு,
'செத்சிறிபாய',
பத்தரமுல்ல,
2018, மாச்சு 06.

**அட்டவணை**

1. மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் களனி பிரதேச செயலாளர் பிரிவின் பேலியகொடை நகர சபை அதிகாரப் பிரதேசத்தின் வட்டார இலக்கம் 6 மற்றும் 7 இன் பேலியகொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அளவிட்டுத் தயார் செய்யப்பட்டுள்ள இலக்கம் கிரா. 3554 மற்றும் 2006.11.18 ஆந் திகதிய நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 1 இன் எல்லைகளாவன –

வடக்கே : பராக்கிரம மாவத்தை மற்றும் பூ. நி. வ. கிரா 3399 இன் துண்டு இலக்கம் 116 உம் ;
கிழக்கே : பூ. நி. வ. கிரா 3399 இன் துண்டு இலக்கம் 117 மற்றும் அரசாங்கத்திற்கு உரித்தான நீர்கொழும்பு வீதியின் வீதவரி இலக்கம் 322/7 ஐக் கொண்ட காணியும் ;
தெற்கே : களனி கங்கையும் ;
மேற்கே : எச். பி. சத்தாதிஸ்த கல்தேரா உரிமைகோரும் பராக்கிரம மாவத்தையின் வீத வரி இலக்கம் தெரியாத காணியும்

ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஹெக்ரயார் பூச்சியம் தசம் ஒன்று இரண்டு மூன்று மூன்று (0.1233) அளவான காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள மரங்கள், பழவகை, கட்டிடங்கள் உள்ளிட்ட சகலதும் உள்ளடங்கும்.


1A - G 27283— 19 (2018/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*2. மேற்படி பேலியகொடை எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அளவிட்டுத் தயார் செய்யப்பட்டுள்ள இலக்கம் கிரா 3554 மற்றும் 2006.11.18 ஆந் திகதிய நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 2 இன் எல்லைகளாவன–*

வடக்கே : *பூ. நி. வ. கிரா 3399 இன் துண்டு இலக்கம் 119 மற்றும் 120 உம் ;*

கிழக்கே : *பூ. நி. வ. கிரா 3399 இன் துண்டு இலக்கம் 122 மற்றும் வைத்தியர் பதீர் உரிமை கோரும் கண்டி வீதியின் வீத வரி இலக்கம் 202 எனும் காணியும் ;*

தெற்கே : *களனி கங்கையும் ;*

மேற்கே : *உரிமை கோருபவரைக் கண்டுபிடிக்க முடியாத கண்டி வீதியின் வீத வரி இலக்கம் தெரியாத காணியும் மற்றும் பூ. நி. வ. கிரா 3399 இன் துண்டு இலக்கம் 119 உம்,*

*ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஹெக்ரயார் பூச்சியம் தசம் பூச்சியம் ஏழு ஏழு இரண்டு (0.0772) அளவான காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள மரங்கள், பழவகை, கட்டிடங்கள் உள்ளிட்ட சகலதும் உள்ளடங்கும்.*

*03-1131*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*